ஜூலை 2025

திராவிட வாசிப்பு

வாசிப்பும் மீள்வாசிப்பும்

இந்துக்களைப் பாதுகாத்த சுயமரியாதை இயக்கம்!

வணக்கம்.

இந்த இதழுக்காக பல்வேறு தலைப்புகளில் கட்டுரைகள் எழுதித்தந்த தோழர்களுக்கு எங்களது வணக்கத்தையும், நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறோம்.

திராவிட வாசிப்பு குறித்த உங்களது மேலான கருத்துகளை, விமர்சனங்களை எதிர்பார்க்கிறோம். கீழ்காணும் மின்னஞ்சலுக்கு உங்கள் கருத்துகளை சொல்லுமாறு பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறோம். நன்றி!

உங்கள் படைப்புகளையும், கருத்துகளையும் இந்த மின்னஞ்சலுக்கு அனுப்பலாம்: dravidavaasippu@gmail.com

கட்டுரைகளை திராவிட வாசிப்பு ஆன்லைன் பக்கத்திலும் வாசிக்கலாம்: https://blog.dravidiansearch.com/

இதுவரை வெளியான திராவிட வாசிப்பு மின்னிதழ்களை “கிண்டிலில்” வாசிக்க: https://www.amazon.in/s?i=digital-text&rh=p_27%3ADravida%2BVaasippu&s=relevancerank&text=Dravida+Vaasippu&ref=dp_byline_sr_ebooks_1

இதுவரை வெளியான திராவிட வாசிப்பு மின்னிதழ்களை “ஆன்லைனில்” வாசிக்க: https://drive.google.com/drive/folders/1-6Sk8TylSzrCfiU0BJ-_Osvh7DRFCl0z?usp=sharing

இப்படிக்கு,
திராவிட வாசிப்பு Editorial Team:

- (அருண் ஆஷ்லி, அசோக் குமார் ஜெ, அஷ்வினி செல்வராஜ், தினேஷ் குமார், ஜெகன் தங்கதுரை, கதிர் ஆர்.எஸ்., மதுமலர், மனிதி தெரசா, இராஜராஜன் ஆர். ஜெ, டிமோத்தி, யூசுப் பாசித், விக்னேஷ் ஆனந்த், விஜய் ஜி.எஸ், பிரபு கணேஷ்)

இந்துக்களைப் பாதுகாத்த சுயமரியாதை இயக்கம்! - வி.சி.வில்வம்

Kamarajar- First Dravidian Model Chief Minister of Independent India – Mohit Palagiri

இந்துக்களைப் பாதுகாத்த சுயமரியாதை இயக்கம்! - வி.சி.வில்வம்

ஒரு மனிதர் இவ்வுலகில் தோன்றினால் அவரின் அறிவு, ஆற்றல், உழைப்பிற்கு ஏற்ப தம் வாழ்வை அமைத்துக் கொள்வார். அதற்கேற்ற பலன்களையும், மகிழ்ச்சியையும் அனுபவித்துவிட்டு, இவ்வுலகை விட்டு மறைந்து போவார்!
இதுதான் பொதுவான நடைமுறை! ஆனால் இந்த நாட்டில் தோன்றிய மனிதர்களை மட்டும் வகை, வகையாகப் பிரித்து வைத்தார்கள்?

மனிதர்களா? சூத்திரர்களா?

சில மனிதர்களைப் பார்த்தாலே தீட்டு என்றார்கள், சிலரை சாலையில் நடக்காதே என்றார்கள், வேறு சிலரைப் பொதுக் குளத்தில் தண்ணீர் எடுக்காதே என்றார்கள், சிலரை செருப்பு போடாதே என்றார்கள், மொத்தத்தில் இந்த மனிதக் கூட்டத்தையே "சூத்திரர்கள்" என்று அழைத்தார்கள்! இரண்டு கால், இரண்டு கை, ஒரு வாய், ஒரு மூக்கு உள்ள உருவத்தை "மனிதர்கள்" என்று தான் உலகம் அழைக்கிறது! இந்தியா மட்டும் தான் "சூத்திரர்கள்" என்று அழைக்கிறது!

எவ்வளவோ பேர் ஆராய்ச்சி செய்தார்கள், ஆய்வுப் படிப்புப் படித்தார்கள், விஞ்ஞானி என்று சொல்லிக் கொண்டார்கள், ஆனால் யாருமே இந்தச் சூத்திரத் தன்மையைக் கேள்வி கேட்கவில்லை. மனிதர்களை, மனிதர்கள் என்று அழைக்காமல், ஏன் சூத்திரர்கள் என்று அழைக்கிறீர்கள் என யாருமே கேட்கவில்லை!

உங்கள் மனநிலை என்ன?

சிலர் நம்மைப் பார்த்து, "எப்பொழுதும் சூத்திரன், சூத்திரன் என்கிற வார்த்தைதானா? உங்களுக்கு வேறு பேச்சே கிடையாதா? எங்களுக்குப் போரடித்துவிட்டது", என்கிறார்கள். நீங்கள் புரிந்து கொள்வதற்காக இப்படிச் சொல்கிறோம்! நீங்கள் எந்த ஜாதியாகவும் இருந்து விட்டுப் போங்கள். நாளை முதல் உங்களை, உங்கள் ஊரில் இந்தெந்த தெருக்களில் நடக்கக் கூடாது, ஊரில் உள்ள குளத்தைப் பயன்படுத்தக் கூடாது, செருப்பு அணியக் கூடாது, பள்ளிக் கூடத்திற்குச் செல்லக் கூடாது என்று சொன்னால், உங்கள் மனநிலை எப்படி இருக்கும்? அப்படித்தானே எல்லோருக்கும் இருக்கும்?

இன்றைக்கு நம்மால் நினைத்துக் கூடப் பார்க்க முடியாத கொடுமைகளையே, நம் தாத்தாவும், பாட்டியும் அனுபவித்து வந்தார்கள். உலகில் வேறெந்த மனிதர்களுக்கும் இப்படிப்பட்ட அவமரியாதைகள் நடந்ததில்லை. இது ஏதோ ஒடுக்கப்பட்ட மக்களுக்கு மட்டும் என்று சிலர் நினைக்கிறார்கள். தமிழர்களில் உயர்ஜாதி (?) என்போருக்கும் இந்த இழிவுகள் இருந்தன. வேண்டுமானால் வெவ்வேறான இழிவுகள் இருந்திருக்கும். ஆனால் ஒட்டுமொத்தமாகத் தமிழர்களையும் சூத்திரர்கள் என்றே அவமானம் செய்தனர்!

ஹிந்துக்களைக் கொடுமை செய்பவர்கள் யார்?

சரி... மேலே சொன்னவாறு தொடக் கூடாது, நடக்கக் கூடாது, படிக்கக் கூடாது என ஹிந்துக்களைக் கொடுமை செய்த மதம் எது? இஸ்லாம் மதமா? கிறிஸ்தவ மதமா? இல்லையே? பிறப்பு முதல் இறப்பு வரை அசிங்கப்படுத்தி, அவர்களின் நிம்மதியைக் கெடுத்தது ஹிந்து மதம்தானே? தம் மதத்தில் இருப்பவர்களையே இப்படி யாரும் கொடுமைப்படுத்துவார்களா? ஆனால் ஹிந்து மதத்தில் அப்படித்தான் நடந்தது. எனவே தான் கூறுகிறோம், ஹிந்து மதத்தால் தமிழர்கள் எந்தப் பயனையும் அடைந்ததில்லை!

அதேநேரம் இந்த நாட்டில் உருவான சுயமரியாதை இயக்கம், தமிழர் வாழ்வைச் செழுமைப்படுத்தியது! தமிழர்களை நடக்கக் கூடாது, தண்ணீர் குடிக்கக் கூடாது, படிக்கக் கூடாது என்று சொன்ன ஆரியர்களை யார் எனக் கேள்வி கேட்டது? அப்படி நீதி கேட்ட அந்தச் சுயமரியாதை இயக்கத்தின் வயது இப்போது 100.

3% ஹிந்துக்களும்; 97% இந்துக்களும்!

"திராவிடர் இயக்கம் ஹிந்து மக்களுக்கு எதிரானது", எனச் சிலர் சொல்கிறார்கள். நாங்கள் சரியாகவே புரிந்து வைத்திருக்கிறோம். இங்கே இருக்கிற 97 விழுக்காடு இந்துக்கள் வேறு; 3 விழுக்காடு ஹிந்துக்கள் வேறு! இந்த 3 விழுக்காட்டினர் தான் உண்மையான ஹிந்துக்கள்! அவர்கள் தான் அதன் உரிமையாளர்கள்! மீதம் 97 விழுக்காட்டினர் ஒரே இரவில் மதம் மாற்றப்பட்டவர்கள். திமிறி வெளி வர முடியாத எங்கள் மூதாதையர் அங்கேயே மாட்டிக் கொண்டார்கள்!

சரி! தமிழர்கள் ஹிந்து மதத்திற்கு வந்துவிட்டார்கள், அவர்களுக்குக் கேடு விளைவிக்க வேண்டாம், அவர்களை அசிங்கப்படுத்த வேண்டாம், அவர்கள் உரிமைகளைப் பறிக்க

வேண்டாம் என்கிற எண்ணம் இல்லாமல், பார்ப்பனர்கள் கொடுங்கோலர்களாகத் தொடர்கிறார்கள்!

பெரியார் ஹிந்துக்களுக்கு எதிரியா?

இந்த 3 விழுக்காடு ஹிந்து மதக் கொடுமைகளைத் தட்டிக் கேட்டதால், 97 விழுக்காடு தமிழர்களுக்கு எதிராக சுயமரியாதை இயக்கத்தை நிறுத்தப் பார்த்தார்கள்! பெரியாரையும், தமிழர்களையும் பிரிக்க நினைத்தார்கள், ஹிந்து மதத்தை மட்டுமே எதிர்க்கிறார் என்றும் தூண்டிவிட்டார்கள்!

ஆனால் உண்மை வரலாறு என்ன? பெரியார் ஹிந்துக்களுக்கு எதிராக இருந்தாரா? இன்றைக்குச் சாலையில் நடக்கவும், செருப்பு அணியவும், தண்ணீர் குடிக்கவும், படிக்கவும் என்று எல்லா உரிமைகளும் வந்துவிட்டது! எப்படி வந்தது? ஹிந்து மதம் தன்னைத் திருத்திக் கொண்டதா? மனிதநேயத்தைக் கற்றுக் கொண்டதா? மூன்று விழுக்காடு பார்ப்பன ஹிந்துக்கள், 97 விழுக்காடு தமிழ் இந்துக்களுக்கு உரிமைகள் கொடுத்துவிட்டார்களா?

சுயமரியாதை இயக்கத்தின் சாதனைகள்!

பிறப்பு முதல் இறப்பு வரை பாதிக்கப்பட்டு வாழ்ந்த தமிழ் இந்துக்களுக்குப் பிறப்புரிமை, எழுத்துரிமை, பேச்சுரிமை, மொழி உரிமை, கல்வி உரிமை, வேலை உரிமை, தொழில் உரிமை, திருமண உரிமை, சொத்துரிமை, மொத்தத்தில் சுயமரியாதைக்கான அத்தனை உரிமைகளையும் பெற்றுத் தந்தது சுயமரியாதை இயக்கம்! தமிழர்கள் இந்து மதத்தில் இருந்தாலும், அதில் நமக்கு மாற்றுக் கருத்து இருந்தாலும், அந்த முரண்களை மட்டுமே பேசிக் கொண்டிருக்காமல், ஆக்கபூர்வமான செயல்களைச் செய்து, தமிழர் தம் வாழ்வை இன்று உலகளவில் உயர்த்திக் காட்டியது சுயமரியாதை இயக்கமே!

இன்னும் சொன்னால் 3 விழுக்காடு ஹிந்து மதப் பார்ப்பனர்கள் வாழ்க்கையும் இன்று விஞ்ஞானப்பூர்வமாக மாறி இருக்கிறது. உடைகள் மாறிவிட்டன, உணவு மாறியது, தலைமுடிகள் மாறிவிட்டன, மொத்தத்தில் அஞ்ஞான வாழ்க்கையையே அவர்கள் வாழ்வதில்லை. பத்து பைசாவுக்குப் பயன்படாத பூணூல் மட்டும் தான் அவர்களிடம் மிச்சமாக இருக்கிறது.

நாட்டிற்கு யார் தேவை?

அதேபோல பார்ப்பனப் பெண்களின் வாழ்க்கை மாற்றத்திற்கு யார் காரணம்? பத்து வயதில் திருமணம் செய்து, வீட்டிற்குள்ளேயே முடக்கி வைத்து, கணவர் இறந்தால் அதே நெருப்பில் போட்டு கொளுத்திய நிகழ்வுகள் எல்லாம் தானாக மாறிவிட்டதா? அல்லது அஹ்ரகாரத்தில் இருந்த ஆண்கள் தடுத்து நிறுத்தினார்களா? அம்மா சாவை மகன்கள் நிறுத்தினார்களா? அக்கா, தங்கை சாவை அண்ணன், தம்பிகள் நிறுத்தினார்களா? இல்லையே? திராவிடர் இயக்கம் தானே செய்தது! சுயமரியாதை இயக்கம் தானே பெண்களைச் சாவில் இருந்து தடுத்தது!

எனவே இந்து மதத்தை ஏற்றுக் கொண்ட தமிழர்களுக்கு இன்று வரை பாதுகாப்பாக இருப்பது சுயமரியாதை இயக்கம்தான்! அதேநேரம் பல நூற்றாண்டுகள் ஆகியும் பார்ப்பனர்கள் தங்கள் அக்கிரமத்தைக் கைவிடவில்லை! நூற்றாண்டுகள் கடந்தும் சுயமரியாதை இயக்கமும் தம் போராட்டங்களை விட்டுவிடவில்லை. எனவே இந்த நாட்டிற்குத் தேவை சுயமரியாதை இயக்கமா? ஹிந்து மதமா? என்பதைத் தமிழர்கள் யோசிக்க வேண்டும்!

அடிமேல் அடிவைத்து ஆகாயத்தைத் தொட்டவர்கள்!

சுயமரியாதை இயக்கத்தின் முன்னால் மூன்று விழுக்காடு பார்ப்பன ஹிந்துக்கள் தோற்றுப் போயிருக்கிறார்கள்! 97 விழுக்காடு தமிழ் ஹிந்துக்கள் வெற்றி பெற்றிருக்கிறார்கள்! காரணம் தொடங்கிய காலத்தில் இருந்தே அடிமேல் அடி வைத்து, இந்த ஆகாயத்தைத் தொட்டிருக்கிறார்கள் சுயமரியாதை இயக்கத்தினர்! எனினும் 2 ஆயிரம் ஆண்டு கால பார்ப்பனர்கள் திருந்திவிடுவார்களா? இத்தனை ஆண்டு கால சொகுசு வாழ்க்கையைத் தான் விட்டு விடுவார்களா? அதனால் தான் சுயமரியாதை இயக்கமும் ஓயாது ஒலித்துக் கொண்டே இருக்கிறது!

சுயமரியாதை இயக்கக் கோட்டை!

திராவிடர் இயக்கத்தின், திராவிட ஆட்சியின் நன்மைகளைப் பெறாத ஒரே ஒரு தமிழ் ஹிந்துவோ, ஒரே ஒரு தமிழ் கிறிஸ்தவரோ, ஒரே ஒரு தமிழ் இஸ்லாமியரோ தமிழ்நாட்டில் இருக்க முடியாது! தமிழர்கள் எந்த மதத்தில், எந்த ஜாதியில் இருந்தாலும், அதில் மாற்றுக் கருத்துகளும், விமர்சனங்களும் இருந்தாலும் அவர்களின் உரிமைகளை ஒருபோதும் இந்த இயக்கம் விட்டுக் கொடுத்ததில்லை! இன்னும் சொன்னால் தங்கள் இன்னுயிரையும் இழந்திருக்கிறார்கள்! ஆகவே தமிழர்களுக்கு மரியாதைக்குக் குறைவு ஏற்படாமல் காத்திடும்

கருப்புக் கவசமே இந்தச் சுயமரியாதை இயக்கம்! இந்த நூற்றாண்டுக் கோட்டையில் தான், அதன் உச்சியில் தான் தமிழர்கள் வாழ்கிறார்கள்! அவர்கள்தம் வாழ்வு மிளிர்கிறது! இன்னும் உயரம் செல்ல வேண்டும்!

- வி.சி.வில்வம்

Kamarajar- First Dravidian Model Chief Minister of Independent India – Mohit Palagiri

Kamarajar was the 3rd chief minister of Tamil Nadu, and he belongs to the Indian National Congress of those times where top leadership was against Dravidian philosophy and leaders. As in the book *Justice Party to Jayalalithaa – Success of Dravidian Polity* by Sathiyamoorthy has mentioned Kamarajar has used Nehruvian-Socialism with his personal touch (Dravidian Model). Let us explore how Kamaraj leaned more towards the Dravidian model than the conservative Congress government of his time.

To the readers, I would like to define Dravidian Model. ***"The Dravidian Model is a progressive form of governance that emphasizes building infrastructure, developing the human resources of the state, providing equal opportunities to all, and eliminating discriminatory practices at all levels. Its economic way is Keynesian. This model originated from the Justice Party of the Madras Presidency, was later revolutionized by Periyar and politicized by Annadurai.***

Initial encounter- Kamaraj and Periyar did not have a direct political connection early on, although both participated in the Vaikom Satyagraha. Surprisingly, Kamaraj initially criticized Periyar for being "selfish" in advocating reservations only for Shudras and Untouchables. In response, Periyar have retorted: **"Without this policy, could Kamaraj have become the President of the Congress Party? Could 11 non-Brahmins have held ministerial positions?"**

Competitors turned to Best Duo- The "New Scheme of Elementary Education- **Kula Kalvi Thittam** (Caste-based Education Scheme)," introduced by Rajaji during his tenure as the Chief Minister of Madras, became a highly controversial policy. It is mandated that students should follow the caste profession of their parents, effectively reinforcing caste-based occupational roles. Though Rajaji attempted to justify it as a form of vocational education, it was widely seen as a clear display of his regressive casteist mindset.

This was criticized by many, including Kamaraj in public meetings, and then Rajaji resigned due to public pressure. Kamaraj and C. Subramaniam(Rajaji's faction) were the next competitors, but initially Kamaraj was reluctant because of his education; however, Periyar entered the arena and convinced Kamaraj to enter the Chief Ministerial race, and then Kamaraj won. Later, during the elections for MLA in Gudiyattam, Periyar gave his support and campaigned for Kamaraj's victory.
Once Kamaraj became the Chief Minister, he scrapped the Kula Kalvi Thittam. This led Periyar to support Kamaraj (not the Congress) for the next 18 years relentlessly.

Golden Age- **"Comrades , the development Tamil Nadu had witness during Kamaraj's rule has never occurred once before in 2000- 3000 years. The three Tamil Dynasties, Nayaks, Marathas, Muslim Sultans, British Government , all did nothing significant about providing education to our people.If this land has to prosper, we have to keep Kamaraj firmly for next 10 years" -**Periyar at Devakottai Conference, 9 July 1961.

Kamarajar's first major step was to ensure that every child attended primary school. He made it mandatory that every child who had completed 6 years of age must be enrolled to school and made sure that those who enrolled could not drop before completing class 5. The system 5 + 3+3 (5th to 8th to 11th grade) is introduced. He opened many colleges – arts, engineering (includes IIT Madras) , polytechnic and introduced various technical courses and postgraduate degrees.

From the academic year 1955 onwards, free education was provided to all poor children whose parents earned less than ₹100 a month. He reduced the fees by half for all students. Free uniforms were introduced to vanish distinctions based on caste and class. The first five-year plan budget was used for massive program of school expansion in the villages of Madras. By the next five-year plan, he focused on secondary education, many schools are built, and hostel facilities were improved. Kamaraj made large-scale teacher recruitments, which helped to address unemployment. Teachers were given provident funds, pensions, free education for their children, increased pay, bonuses, and more.

Kamaraj's famous Midday Meal Scheme, inspired by the Justice Party, encouraged many students to attend school, increasing enrollment from 2 lakhs to 12 lakhs. The scheme was funded by both public and private sources, with support from the American International Voluntary Organization and CARE to expand it to urban schools.

Kamaraj's education policy made education a right, not a luxury. The budget for education was increased, and greater focus was given to this sector. This marked the beginning of the Dravidian Model of education, which emphasizes inclusivity, diversity, holistic development, and equality. Periyar, in a 1972 speech, said, **"Rationalism in Tamil Nadu increased because of Kamaraj's education policies."**

Developing Modern State- Kamaraj shared the same views as Periyar; he said socialism is not confined to a doctrine or theory but must cater to the needs of the people, especially poor. The Dravidian Model, therefore, is not bound by rigid doctrines but adapts to the changing needs.
Kamarajar has concentrated on industrialization policy. As first India is agricultural economy, he built many irrigation systems and canals which has resulted in great food production. Then he built power projects for rapid industrialization. The same power projects helped in electrifying the villages to cities in Tamil Nadu.

The Neyveli Industrial Complex, Salem Steel Plant, Photo Film Factory, BHEL, Viscose Factory, and many industrial corridors were part of his plans. Companies like Ashok Leyland, TVS Motors, India Pistons, etc saw significant growth during this time. Lending to industrialists and entrepreneurs increased, boosting their growth. He also curbed the red-tapism. It is important to recognize that not only large industries, but small and medium industries also benefited significantly. Kamaraj also aligned education to meet the needs of the market.

The Modern State includes equal opportunities, where Kamaraj was the highest proponent of reservations and equal opportunities, where he advocated to give opportunities to the downtrodden echoing Periyar vision publicly. There used to be a CM quota in MBBS, and Kamaraj specifically selected Dalit students for admission. He enacted laws where low waged farmers are protected from

money lenders and also made checked landowners with 30 acres of land ownership. In his cabinet too, there were Dalit ministers in crucial positions, whereas his predecessor (Rajaji) had eight Brahmins in the cabinet out of 14 ministers.

Kamaraj upheld the Tamil language and its rights, earning the title Pacha Tamizhan (Pure Tamilan) from Periyar. He prevented Hindi imposition in the state, promoted the translation of scientific texts into Tamil, ensured all official documents were in Tamil, and declared Tamil as the official language of Tamil Nadu. A central government proposal to merge all South Indian states into a single unit called Dakshina Pradesh was strongly opposed by Periyar, and Kamaraj opposed it at the central level. As Periyar warned, Dakshina Pradesh would have made Tamils a minority and posed serious risks to other communities as well.

After winning his third term, Kamaraj resigned to improve the party's performance across India, which Periyar described as political suicide. Later, Kamaraj became a kingmaker but died with only ₹130 in total. Before his death, he was actively opposing Indira's Emergency and tyranny.

Conclusion- Anna and Periyar were like student and teacher, but Periyar and Kamaraj shared a bond like Father and Son. Kamaraj and Periyar were rational-minded and had little formal education. Kamaraj once said that Periyar was the most intelligent person in all of Tamil Nadu. When Kamaraj's house was burnt in Delhi by RSS goons, he replied, "If they have the guts, let them do it in Chennai — Periyar will answer them." When the entire Congress was against Periyar and pressured Kamaraj to cut ties, Kamaraj supported Periyar unconditionally and even took him to public meetings. Periyar used to name newborn baby boys as Kamaraj. Seeing this, Rajaji wrote that Kamaraj's rule resembled Periyar's administration and a rule that evaded God.

While Periyar had started supporting the DMK, during the 1969 by-polls in Nagercoil, he campaigned for Kamaraj's victory. Once claimed , "When it comes to education, pray to Kamaraj, not to God." When Periyar passed away, Kamaraj said, "Periyar was a great nationalist who brought immense awareness to Tamilians in every aspect."

It is clear from the above facts that Kamaraj was a Chief Minister who followed the Dravidian Model, and no other Nehruvian Chief Minister adopted policies like him. Kamaraj's association with Periyar, the RSS burning his house, and a 1966 publication that gave a passive death threat to him all prove that Kamaraj cannot be saffronised by the Nagpur team. Kamaraj was a hardcore democratic, secular, and socialist leader — values that are still disliked by RSS ideologues even today. At last, Kamaraj chose Gandhi in his lifestyle and Periyar in his governance.